# ஆத்ம ஜோதி.



அப்பர் சுவாமிகள்.

ஓம்.

# ஆத்ம ஜோதி

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே." —சுத்தானந்தர்.

சோதி 3. | கர-௵ சித்திரை-மீ. | சுடர் 6.

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1 | அப்பர் தேவாரம் | 153 |
| 2 | ஆளுடையவரசு அருண்மாலை | 154 |
| 3 | அஞ்சாமை | 155 |
| 4 | காந்தீயத்தின் கண்ணாடி போன்ற கவிஞர் | 158 |
| 5 | தூயசிந்தனைக்களஞ்சியம் | 160 |
| 6 | நம் தாய் நாடு | 161 |
| 7 | உலகத்தை திருத்துமுன் உன்னைத் திருத்து | 164 |
| 8 | நாவுக்கரசர் காட்டிய நாற்பாதம் | 167 |
| 9 | தமக்கையார் தவம் | 169 |
| 10 | இன்ப வாழ்க்கைக்கு இன்றி.........யொன்றே | 171 |
| 11 | சைவக்கிரியை............வொழுக்கமும் | 174 |
| 12 | கண்டி சாது ஸ்ரீ பீர்பாவா...........மொழிகள் | 175 |
| 13 | சிவகதி விளைவு...........முறை | 176 |
| 14 | ஞானம் | 177 |
| 15 | இந்துப்பெண்கள் ஆச்சிரமம் | 179 |





## ஆத்ம ஜோதி

(ஓர் ஆத்மீக மாத வெளியீடு.)

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ... | ரூ. 75/– |
| வருடச்சந்தா | ... | ரூ. 3/– |
| தனிப்பிரதி | ... | ச. –/30 |

"ஆத்ம ஜோதி" நிலையம்,
நாவலப்பிட்டி, (இலங்கை.)

திருச்சிற்றம்பலம்.

# அப்பர் தேவாரம்.

---;-:(-)-:---

(தனித்திருக்குறுந்தொகை.)

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங்கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே.

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈசனே னுங்கனி
இனிது சாலவும் ஏசற் றவர்கட்கே.

திருச்சிற்றம்பலம்.

ஓம்.

# ஆளுடையவரசு அருண்மாலை.

——:-:-:-:——

திருச்சிற்றம்பலம்

திருத்தகுசீ ரதிகையருட் டலத்தி னோங்குஞ்
சிவக்கொழுந்தி னருட்பெருமைத் திறத்தால் வாய்மை
யுருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ
வொளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப்
பொருத்தமுற வுழவாரப் படைகைக்கொண்ட
புண்ணியனே நண்ணியசீர்ப்புனித னேயென்
கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக்
கடலேநின் கழல்கருதக் கருதுவாயே.

கண்ணுளே விளங்குகின்ற மணியே சைவக்
கனியேநா வரசேசெங் கரும்பே வேதப்
பண்ணுளே விளைத்தவருட் பயனே யுண்மைப்
பதியோங்கு நிதியேநின் பாத மன்றி
விண்ணுளே யடைகின்ற போக மென்றும்
விரும்பேனென் றனையாள வேண்டுங் கண்டா
யொண்ணுளே யொன்பதுவாய் வைத்தா யென்ற
வுத்தமனே சித்தமகிழ்ந் துதவுவோனே.

அருள்வழங்குந் திலதவதி யம்மை யார்பின்
னவதரித்த மணியேசொல் லரசே ஞானத்
தெருள்வழங்குஞ் சிவநெறியை விளக்க வந்த
செழுஞ்சுடர்மா மணிவிளக்கே சிறிய னேனை
யிருள்வழங்கு முலகியனின் றெடுத்து ஞான
வின்னருடந் தாண்டருள்வா யின்றே லந்தோ
மருள்வழங்கும் பவநெறியிற் சுழல்வே னுய்யும்
வகையறியே னின்னருட்கு மரபன் றீதே.

(இராமலிங்கசுவாமிகள்.)

# அஞ்சாமை.

ஆசிரியர்.

"அச்சமில்லை யச்சமில்லை, அச்ச மேன்ப தில்லையே
இச்சகத்து ளோரேல்லாம், எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை, அச்சமேன்பதில்லையே."

— பாரதியார்.

இந்த நிலைவருவதற்கு எவ்வளவு துணிவு வேண்டும். "தம்பி யுள்ளவன் சண்டைக்கஞ்சான்" என்பது பழமொழி. தம்பி பக்கத்தில் நிற்கும்போது அண்ணாவின் பேச்சு துணிவினால் உச்சஸ்தாயியை அடைகிறது. மக்களுக்கு உலக வாழ்வில் எத்தனை வழிகளில் எல்லாம் அச்சம் ஏற்படுகிறது. செல்வம் இருந்தால் அச்சம்; இல்லாவிட்டாலும் அச்சம். குழந்தை இருந்தால் அச்சம்; இல்லாவிட்டாலும் அச்சம். மனைவி இருந்தால் அச்சம்; இல்லாவிட்டாலும் அச்சம். இப்படி மனித வாழ்வில் அச்சமே மயமாகி உள்ளது. மனிதன் தனது பொறுப்புக்களை யெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணஞ் செய்து இறைவனிடம் பூரண சரணாகதி அடைந்துவிட்டால் அவன் உலகில் எதையும் கண்டு அஞ்சவேண்டியதில்லை.

நாவுக்கரசர் சூலைநோய் காரணமாக பஞ்சாட்சரமோதிச் சமண சமயத்தை நீங்கிச் சைவரானார். சமணர் கொதித்தனர்; சூழ்ச்சியில் இறங்கினர். பல்லவ அரசன் நாவுக்கரசரைச் சிறை பிடிக்க, மந்திரியுடன் படைகளை அனுப்பி வரச்சொல்லி ஆணையிட்டான். "நான் அரனுக்கே ஆள், புவியரசனுக்கல்லேன்."

"நாமார்க்குங் குடி அல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்;
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை;
தாம் ஆர்க்குங்குடி யல்லாத்தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழைஓர் காதிற்;
கோமார்க்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கோய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே."

—என்றார் நாவுக்கரசப் பெருமான். உடலையும், உயிரையும், மனத்தையும் அரனுக்கே தந்தார் அப்பர். தான் உடல், உயிர், மனம் என்ற சிற்றறிவையும் பற்றையும் விடுத்தார்; தன்னுட் கோயில்கொண்ட பரமனையே பற்றி நின்றார். அவருக்கு நீற்றறையுங் குளிர்ந்தது. வேகும் சுண்ணமும் சிவக்கோலமாகத் தென்பட்டது. பகைவர் கொடுத்த விடமும் நீலகண்டனையே நினைக்கும் அடியாருக்கு அமுதமானது. "அஞ்சுவது யாதொன்றுமில்லை. அஞ்ச வருவதுமில்லை" என்று தெய்வ உறுதியுடன் நின்ற அப்பரை வெறிமத யானையும் வணங்கிற்று.

"கற்றுணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே."

—என்று தியானித்தார். கழுத்திற் கட்டிய கல்லும் தெப்பமானது. இவற்றின் இரகசியம் என்ன? உலகம், உடல், செல்வம், அரசாட்சி, பட்டம், பதவியென்று மனத்தைப் புறத்தே விடுத்து பந்த தொந்தங்களைச் சுமந்தலைவோனுக்கே உலகிடர்கள் உறுத்தும். உடலையே நினைந்து உண்மையை மறப்பவன் தனது இருவினைக் கல்லுடன் இடர்க்கடலில் மூழ்குவான். உண்மைக்கே உடல், பொருள், ஆவி ஈந்து அச்சமற்றிருக்கும் அறிவாளிக்கு முக்குண மாயையால் வரும் இடர்க் குலங்கள் இடராகா. பரமனே உண்மை. அவனையே பற்றுக. இடர்களெல்லாம் தாமே விலகும். இறைவனை நம்பினோர் இடர்களுக்கஞ்சார்.

இதுவரை அப்பரது வாழ்வில் அஞ்சாமை கண்டோம். இனி அவரது தேவார உட்பொருளையறியோம்.

நாம் அரசர் ஒருவருக்கு உட்பட்ட குடியல்லோம், யமனுக்கும் அஞ்சமாட்டோம். அவனால் நரகத்திலே தள்ளப்பட்டுத் துன்பப்படமாட்டோம். உலகத்தில் எம்மிடம் பொய் வாழ்வு இல்லை. எவரும் எம்மை ஒன்றுஞ் செய்யமுடியாது என்று இறுமாந்திருப்போம். மலத்தால் பிணிக்கப்படுதலை அறியமாட்டோம். எவருக்கும் தாழமாட்டோம். எமக்கு எந்த நாளும் இன்பமேயன்றித் துன்பம் என்பது இல்லை. ஏனெனில் நாம் ஒருவருக்கும் குடியல்லாத தன்மையுடையவரும், சங்கரன் எனப்படுகிறவரும் நல்ல வெண்மையான சங்குக் குண்டலத்தை ஒரு

காதிலே உடையவருமான எம் தலைவருக்கே நாம் எந்நாளும் மாறுபடாத அடிமையாகி, அவருடைய பூக்கள் நிறைந்துள்ள செம்மையான இரண்டு திருவடிகளையே கதியாக அடைந்துவிட்டோம். அதாவது சிவத்தன்மை பெற்றுவிட்டோம்.

பிறர்க்குத் தாய் அடிமைப்படாது பிறரை தம் அடிமைகளாகக்கொண்ட சுதந்தரமூர்த்தியான சிவபெருமானுக்கு மாறாத அடிமையாய், அவரது திருவடிகளையே அப்பர் புகலாகப் பற்றினார். அதனால், அவர் பிறர்க்குப் பணியவேண்டாத பெருமையையும், நோயும், துன்பமும், துன்புறுத்த முடியாத நிலைமையையும் அடைந்த இறுமாப்பைத் தெரிவிக்கிறார்.

“நாம் யாருக்கும் குடியல்லோம்.” (1) தன் வசமாயிருக்குந் தன்மையையும், ‘நமனை அஞ்சோம்’ (2) தூய உடம்புடைமையையும், ‘நரகத்தில் இடர்ப்படோம்’ (3) இயற்கையுணர்வுடைமையையும், ‘நடலையில்லோம்’ (4) பாசங்களின் நீங்குதலையும், ‘ஏமாப்போம்’ (5) பொருளுடைமையையும், ‘பிணியறியோம்’ (6) முற்றுமுணர்தலையும், ‘பணிவோமல்லோம்’ (7) வரம்பில்லாத ஆற்றலுடைமையையும், ‘இன்பமே எந்நாளும்’ (8) வரம்பில்லாத பேரின்பமுடைமையையுங் குறிக்கும் என்றும், அப்பர் சுவாமிகள் இறைவனோடு கலந்திருந்தமையினால், இறைவனது எண் குணங்களும் தம்மிடத்துப் பதியப் பெற்றார் என்றும் உரைப்பார். சீவத்தன்மை குறுகினால் சிவத்தன்மை வருமன்றோ? (சீவன் = சிவன்) எம் பெருமான் அடியை அடைந்து ஐக்கியம் பெற்றோம்.

---

**வாகீசர் வணக்கம்.**

இடையறுப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்தின்
படையறுத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறுப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறுச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வோம்.

—[ காஞ்சிப் புராணம் ]

# காந்தீயத்தின் கண்ணாடிபோன்ற — கவிஞர் —

—[இராதா]—

திலகர் விதைத்த விதை நாமக்கல் கவிஞராக முளைத்தது. இது தென்னாட்டு அரசியல் ஞானி ராஜாஜியின் பொன்மொழி ஆம்...... காந்தீயத்தின் தத்துவங்களைத் தமது கவிதைகளின் மூலமாகத் தமிழர்களின் உள்ளங்களில் ஆழமாகப் பதியும்படி செய்துவிட்டார் கவிஞர். அதற்குச் சான்று காந்தி அஞ்சலி என்ற கவிதா நூல்.

பாரதியைத் தெரியாத தமிழர்கள் யாருமில்லை. பாரதியைப்பற்றியும், அவர் தம் உணர்ச்சி மிக்க கவிதைகளையும் பாவலர் முதல் பாமரர்வரை அறிவார்கள். 'பாட்டுக்கொரு புலவன் பாரதி' என்பதுபோல 'நாட்டுக்கொரு கவிஞர் நாமக்கல்லார்' என்றால் மிகையில்லை. பாரதியார் வளர்த்த சுதந்திரக் கனலை அவருக்குப்பின் அணையாமல் காத்து அவர் கனவுடன் கண்ட இலட்சியங்களை தன் கண்ணால் கண்டு களித்தார் கவிஞர். நிற்க.

"சூரியன் வருவது யாராலே" என்ற பாட்டின்மூலம் குழந்தைகளின் உள்ளங்களில் கவிஞர் மங்காத தெய்வப் பற்றை உண்டாக்குகிறார். "இந்திய நாடிது என்னுடை நாடு"என்னும் பாட்டால் இளைஞர்களின் இதயங்களிலே எழுச்சியையும் தேசப் பற்றையும் தூண்டினார். தன்னிலை மறந்த தமிழர்களுக்கு "தமிழா தலை நிமிர்" ஆனால், தருக்கடையாதே. உன் நாட்டவர்போல் பிற நாட்டவரையும் நேசி. உயர்ந்த இலட்சியத்தின் உறைவிடம் நீதான் என்பதை,

வள்ளுவரின் வழிவந்த தமிழா நீதான்
வாய்மையுடன் தாய்மை அறம் காத்த வள்ளல்

என்ற அடிகளால் உணர்த்துகிறார். "தமிழின் இதயம்," என்ற கவிதை நூலில் இதுபோன்ற அறிவையும், எழுச்சியையும் ஊட்டும் பாடல்கள் நிரம்பி இருக்கின்றன.

ஆங்கிலேயராட்சியைத் தகர்க்க அண்ணல் காந்தி மகான் நடத்திய சத்தியப் போருக்கு "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று தம் பாட்டால் வெற்றி முரசு கொட்டினார். அண்ணல் காந்தியாரை அவர் தம் வழிகளை நன்கு

அறிந்து மக்களும் அதன்படி நடக்கவேண்டும் என்று ஆசை கொள்ளச் செய்யும் "உலகம் வாழ்க" என்ற தலைப்பைக்கொண்ட பாடலில்,

" குத்தீட்டி ஒரு புறத்தில் குத்த வேண்டும்
கோடாரி ஒரு புறத்தைப் பிளக்கவேண்டும்
ரத்தம் வரத் தடியடியால் ரணமுண்டாக்கி
நாற்புறமும் பலர் உதைத்து நலியத்திட்ட
அத்தனையும் நான் பொறுத்து அஹிம்சை காத்து
அனைவரையும் அதைப்போல நடக்கச் சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்து உதட்டில் சிரிப்பினோடும்
உயிர் துறந்தால் அதுவே என் உயர்ந்த ஆசை."

என்ற காந்திஜியின் கருத்தைப் படம் பிடிக்கும் அடிகளும் 'காந்தி வழி பழசா' என்ற பாட்டில்,

" பெற்றெடுத்த தாய் மிகவும் பழசாய்ப் போனாள்
பிறிதொரு தாய் வேண்டுமென்று பேசுவார்போல்
உற்ற துணை காந்தி வழி பழசா மென்றால்
உய்வதற்கு வேறுகதி உண்டோ நெஞ்சே!"

*　　*　　*　　*　　*　　*

" சந்திரனும் சூரியனும் பழசாய்ப் போனார்
சலித்து விட்டோம் தினந் தினமும் அதையே பார்த்து
விந்தையுள்ள வேறிருவர் வேண்டுமென்று
விரும்புவதை ஒக்குமன்றோ விளம்பாய் நெஞ்சே."

என்ற அடிகளும் மக்களின் மனத்தில் அசைக்கமுடியாத காந்தீயப் பற்றை உண்டாக்கிறது. காந்தீயத்தின் வாழ்விடம் தமிழகம்தான் என்பதை,

தமிழறிந்த சத்தியம்
காந்தி வாழ்ந்த தத்துவம்.

என்ற அடிகளாலும்,

தமிழருக்குக் கருணை எண்ணம்
தாயின் பாலில் தந்தது;
தமிழையொத்த உயிரை நல்ல
கொள்கைக் கீய முந்திடும்
அமுதமொத்த காந்தி மார்க்கம்
தமிழகத்தின் செல்வமாம்.

என்ற அடிகளாலும் உணர்த்துகிறார். காந்தீயத்தின் கண்ணாடி கவிஞர் என்றால் மிகையில்லை.

— வசந்தம்.

## — தூயசிந்தனைக் களஞ்சியம் —

[ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதியர்கள் நூல்களிலிருந்து திரட்டப்பெற்றது.]

16 மனிதனது முன்னேற்றம் அல்லது பரிணாமத்துக்குக் கடவுள் செய்யும் உபாயமே வேலை.

17 சரியான பருவத்தில் வேலை என்னும் விதையை விதை. அஃது முடிவில் மிகச் சிறந்த பலன் தரும்.

18 உறுதி தளராத விசுவாசம் சாதகனைப் பரம்பொருளுடன் இணைக்கிறது.

19 முயற்சி இல்லாவிடத்து ஒரு குறித்த மனோபாவனை (IDEAL) யைப்பற்றிய ஆவல் அவிந்துவிடுகிறது.

20 வாழ்க்கையைச் சாரப்படுத்துவது எல்லோருக்கும் நலன் விரும்புவதாகிய நற்பழக்கமே.

21 அன்பு ஒருவனைப்பற்றி ஆராய்வதும் இல்லை. ஒருவனை நிந்திப்பதுமில்லை.

22 உலகில் மிகுந்த பலம் வாய்ந்த சக்தியாவது வெளிப் பகட்டில்லாத அன்பு ஒன்றே.

23 மனித வாழ்க்கை என்னும் தராசின் இரு தட்டுகள் எனப்படுபவை, அன்பும், அறமுமே. (கடமையுமே)

24 அன்பிலா வாழ்க்கை அற்பமானது.

25 வாழ்க்கையில் பலன் கருதா அன்பை வளர்.

26 வாழ்க்கையின் உப்புப்போன்றது கர்மம்.

27 வாழ்க்கையின் உணவுபோன்றது அன்பு.

28 வாழ்க்கையின் நீர்போன்றது நம்பிக்கை.

29 வாழ்க்கையின் சுவைபோன்றது பக்தி.

30 வாழ்க்கையின் இலட்சியம் விடுதலை.

31 வாழ்க்கையை ஒரு வற்றாத ஆனந்தமாகச் செய்துகொள்

32 உண்மையினால் ஆனந்தத்தைப் பெறு.

33 தவத்தினால் ஆனந்தத்தைப் பெறு.

34 தயையினால் ஆனந்தத்தைப் பெறு.

35 ஈகையால் ஆனந்தத்தைப் பெறு.

முற்றொடர்ச்சி

# நம் தாய் நாடு.

[பிரமசாரி சோமசுந்தரம்]

தனித்தமிழில் சிறந்த இலங்கைத் தமிழர்களாகிய யாம் தேவார திரு வாசகங்களைப் பாடி அகங்குழையலாகாதா. இதைப்போன்ற தேவசன்னதிகளில், நாயன்மார்கள் மனங் குழைந்து, ஆனந்தத்தேன் சொரிய உருண்டு உருண்டு கண்ணீர் தாரைதாரையாகப் பெருக இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பரமபதம் அடைந்தார்கள். இப்பாசுரங்களை ஓதுவதற்குப் பாவலரும், நாவலரும் நம் இலங்கையில் இல்லையென்ற குறையா தேவாலயங்களில் நித்தியம் ஓதுவோர் இல்லாவிடினும், உத்ஸவ காலங்களிலாவது இப்பாசுரங்களை ஓதுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சுத்த சைவர்களென்றும், விசால மனப்பான்மை உடையரென்றும் நம் இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் ஒரு தனிச்சிறப்பிருக்கிறது. இப்பெருமையை அணிந்த அன்பர் களே, தர்மத்தின் பெருமையை உணர்ந்த சைவப்பெருமக் களே, மற்றும் தனவான்களே, உற்ஸவ காலங்களில், தேவால யங்களிலும் வேறு ஏற்ற புனித பீடங்களிலும், புலவரையும், சமய நூல் வல்லோரையும் அழைந்து சமயப் பிரசாரம் செய்விப் பது உங்கள் அரும்பெரும் தொண்டாகும். ஒவ்வொரு கோவில் களிலும் தேவார பாராயணம் செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும். இது ஓர் தேவ கைங்கரியமாகும். யாம் பக்தியில் வளர்ந்த மக்கள். பக்தியே முக்திநெறியாகும். ஈசனை யுள்குவார்க்கன்றியில்லை முக்தியாம்.

மணிவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், நக்கீரர், சேக் கிழார், கம்பர், வள்ளுவர், அருணகிரி பட்டினத்தார், தாயுமா னவர், வள்ளலார்போன்ற மகான்களும் ஔவை, காரைக்கால் அம்மையார்போன்ற ஞான நாச்சியார்களும் தோன்றிய தியாக பூமி நம் இந்தியா என்பதைத் தமிழ் மக்கள் மறக்கக்கூடாது. மக்களெல்லாம் கன்ம பயன் துய்ப்பதற்கு வந்து சேரவேண்டிய தேசமும், கடவுள் வழியில் செல்லும் ஒவ்வோர் ஆன்மாவும் கடைசியாய் அடைதற்குரிய வீடும் நமது பரத கண்டமாகும்.

இந்தியா அழியாத வலிமையுடையது. முடிவில்லாத வாழ்வுடையது. சமயம், சாஸ்திரம், சன்மார்க்கம், சாந்தம், ஆத்ம வித்தை அன்பு இனிமை இவைபோன்ற மகோன்னதமான இலட்சியங்களை என்றும் மாக்தர்க்குப் புகட்டி வருகிறது.

ஆயிரம் ஆயிரம் வருஷங்களாகப் பல திசைகளிலும் பரவி வரும தத்துவ உண்மைகளாகிய அலைகள் இங்கிருந்தே தோன்றி வருகின்றன. சரித்திரம் எட்டிப் பாராத அவ்வளவு மிகப் புராதன காலந்தொட்டு பாரத நாடு ஏனைய உலகத்திற்கு உயர்ந்த கருத்துக்களை அளிக்கும் அருஞ் சுரங்கமாயிருந்து வருகிறது. மக்களுடைய மனத்தைக் கவர்ந்தே இவ்வெண்ணங்கள் பரவியிருக்கின்றன. தர்ம நெறி தவறி எண்ணங்களைப் பரப்பியதே யில்லை. ஆத்ம சிந்தனையிலும், தெய்வீகத் தன்மையிலும் இந்தியா ஒரு தனிச் சிறப்பு வகிக்கிறது.

வீரமாமுனிவராகிய விவேகானந்தர், தாய் நாட்டைப்பற்றி நாட்டு மக்களுக்கும் மற்றையோருக்கும் மனத்தில் பதியும்படியும், உள்ளத்தில் ஊன்றும்படியும், இரத்தக் குழாய்களின் மூலம் ஓடி ஒவ்வொரு சொட்டு இரத்தத்துடன் கலந்து சேர்ந்து மனிதனை சுயமனிதனுக்கும்படியும் தாய்நாட்டைப்பற்றி கர்ச்சித்த சாரத்தை இதன் கீழ் குறிப்பிடுகிறேன்.

"சங்கீதத்தில் முக்கியமான மத்தி சுரம் ஒன்றிருப்பது போல், தேசீய வாழ்க்கையென்னும் சங்கீதத்துக்குச் சமயமே இங்கு சுரிதியாகும். சமயமே இந்தியாவின் உயிர் நாடி. அரசியல் சமூக முன்னேற்றங்கள் எல்லாம் அவசியம். ஆனால் அவையெல்லாம் சமயத்திற்கு இரண்டாவது. இத்தேசம் தன் சிறப்பியலான சமய வாழ்க்கையைத் துறந்து, புதிய அரசியல் வாழ்க்கையோ, அல்லது வேறொன்றையோ ஏற்றுக்கொள்ளுதல் இயலாத காரியம். இப்புராதன நாடு இன்னும் உயிர் வாழ்கின்றதென்றால் அதன் காரணம் ஆண்டவன், சமயம் என்னும் இவைகளை விடாமற் பற்றிக்கொண்டிருப்பதேயாம். இந்தியர்களாகிய நாம் எத்தனையோ துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகி வறுமைக் குழியில் வீழ்ந்து கிடந்தும், உள்நாட்டுக் கொடுமைகளுக்கும், வெளிநாட்டுச் செந்தலைப்பூச்சிகளின் கொடுமைகளுக்

கும் உள்ளாகியிருந்தும், இன்னும் உயிர் வாழ்ந்திருப்பதின் காரணம் என்ன? தர்ம பூமியாம் இந்நாட்டில் ஆத்ம வித்தியாதானமென்னும் முதன்மையான அறத்தை நாம் மேற்கொண்டதே. சமயமே வாழ்வின் மூலவேர். அது சரியாயிருந்தால் எல்லாம் சரியாய் இருக்கும். வாழ்வின் அடிப்படை சட்டமன்று. சன்மார்க்கமும், தூய்மையும் வாழ்விற்குப் பயனளிப்பவை."

நமது நவீன சீர்திருத்த இயக்கங்கள் எல்லாம், பெரும்பாலும் மேனாட்டு உபாயங்களையும், மேனாட்டு வேலைமுறைகளையும் யோசனையின்றி பின்பற்றுவனவாய் இருக்கின்றன. பிரபு குலத்தில் பிறந்த மேல்நாட்டார் மக்களைக் காலின்கீழ் நசுக்கிக்கொண்டே வந்தனர். பல ஆண்டுகளாய் அவர்க்கு உழைக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டவர்களாதலின், தாம் அடிமைகளாகவே பிறந்தோம், குற்றேவல்புரியவே வாழ்க்கை எடுத்தோம் என்று, உண்மையாகவே நம்பத் தலைப்பட்டனர். அவ்வாட்சியின் மாட்சியால் நம்பிக்கை இழந்து, நாட்டு உடைகளை வெறுத்து, நாட்டுத் தொழில்களைப் பழித்து, நாட்டுக் கலைகளைக் கொலைசெய்து, மதம், ஆச்சாரம் எல்லாம் பொய்ப் பகட்டெனக் கருதி அந்நியர்கட்கு ஆக்கந் தேடினர். ஆங்கிலம் பயில்வதிலும், உத்தியோகம் தேடுவதிலும், பட்டம் பெறுவதிலும் வேட்கை கொண்டனர். உண்பது உடுப்பது, ஆடுவது பாடுவது, முதலிய உலக போகங்களில் மூழ்கி அடிமைத் தனத்தையே இன்பநிலையெனக் கருதி மயங்கிக் கிடந்தனர். மேலும் அவர்களுடைய பார்வை, பேச்சு முதலிய எல்லாவற்றிலும் அந்நிய நாகரீகச் சாயல் படிந்துவிட்டது. தாய் நாட்டிலேயே அந்நியர்களாய்விட்டார்கள். நாட்டுப் பற்றுக் குறைந்து, அடிமை உணர்வு வளர்ந்தது. தொன்றுதொட்டுக் கடைப்பிடித்து வந்த பாரமார்த்திக வாழ்விற் பற்றுவிட்டு சிற்றின்பந் தரும் பௌதிக வாழ்வு ஒன்றே மேலான இலட்சியமென்று கருதினார்கள். மேல் நாட்டு நோக்கங்களையும், பழக்க வழக்கங்களையும் சீர்திருத்தம் என்னும் பெயரால் நமது பெரும் சமயத்தினுள் நுழைத்து வந்தார்கள். அத்யாத்மீக அனுபவமே இல்லையென்றும், அநுபூதியெல்லாம் வெறும் மதிமயக்கம் என்றும் கருதினார்கள். இப்படி நம் தாய்நாடாகிய இப்பாரததேசம் காலமாற்றத்தினால் கொடுமை மிகுந்து இருள் சூழ்ந்தது.

# உலகத்தைத் திருத்துமுன் —
# — உன்னைத் திருத்து.

சீடன்: சாந்தம் நாடி வந்தேன். வடநாடெல்லாம் இந்து முஸ்லீம் இரத்த வெள்ளம் ஓடுகிறது. தென்னாட்டில் பாஷாவாரி மாகாணங்களைப் பிரிப்பதில் நாய்ச் சண்டை நடக்கிறது. திருப்பதி முதல் தென்குமரி வரையில் நமது தமிழ்நாடு என்பது தொல்காப்பியர் நாள்முதல் உலகறிந்தது. இன்று சென்னைக்குக்கூட ஆபத்து வந்திருக்கிறது. ஆங்கிலேயரிடம் நாம் நானுசாகேப் காலம்முதல் நடத்திய போர், காந்தி காலத்தில் சாத்வீகமாக முடிந்தது ஆனால் நம்மவருடனே நாம் இனிப் போராடியே நாட்டில் அமைதி நிலைநாட்ட வேண்டியிருக்கிறது. நீங்களெல்லாம் தவச் செல்வர்கள். நாட்டிற்கு ஒரு வழி காட்ட வேண்டும்.

குரு: அன்பனே! வழி காட்டிக்கொண்டுதான் இருக்கிறோம். நடப்பவர் யார்? மஹாத்மா நவகாளி யாத்திரையில் கல்லும் கரையும்படி சமாதானம் பேசினார். அவர் பட்னாவுக்கு வந்ததுமே அங்கே கொடிய கலகம் காளாக்னியாகக் கிளம்பிவிட்டது. பஞ்சாபில் ஊர் ஊராகத் தீயும் வாளும் துப்பாக்கியும் கொலையாட்டயர்ந்தன. பம்பாயிலோ, தலைகாட்டமுடியாது! கத்திக்குத்து. இந்து மதமோ, இஸ்லாமியமோ, கிறிஸ்து பார்ஸி மதங்களோ இந்த அட்டூழியங்களை உபதேசித்ததில்லை. மனிதனைப் பிடித்த பேத புத்தியும் பொறாமைப் பித்தமும் இப்படி அட்டூழியம் செய்கின்றன.

சீடன்: குருதேவா, இந்தக் கலக உலகம் திருந்த வழியுண்டா?

குரு: அப்பனே, உலகைத் திருத்தக் கிளம்பாதே; உன்னைத் திருத்திக்கொள் நீ திருந்தினால் உலகில் ஓர் ஆன்மா உய்ந்ததாக விரல் மடக்கலாம். உன்னைப் பார்த்துப் பலர் திருந்தலாம். உன்னைப் பார்; பிறகு உலகைப் பார், நீயும் உலகும் ஒன்றே. இரண்டும் ஒன்றானால் எது எதைப் பகைப்பது; வருத்துவது?

நல்லொழுக்கம் பற்றி நடந்து நடந்து தினம்
அல்லொழுக்கம் போக அடக்கு.

சீடன்: சுவாமி, நான் என்னைத் திருத்திக்கொண்டுதான் வரு கிறேன். ஆனால் என் முன் உலகம் உள்ளதே.

குரு: நாங்கள் மனித சமுதாயத்தை மறக்கவில்லை. மனித சமுதாயம் எங்களை மறக்கமுடியாது. ஏனெனில் பிண்டத்தானே அண்டத்தான். உள்ளத்தானே உலகத்தான். இந்த நெஞ்சில் துடிக்கும் சுத்தான்மாதான் உன் நெஞ்சிலும் உலகுயிர் நெஞ்சிலும் துடிக்கிறது. இந்த நெஞ்சினுல் சுத்த மூர்த்தியை சாக்ஷாத்கரித்தால் அவன் மயமாகவே உலகைக் காணலாம். அப்போது பலவாருகத் தோன்றும் உலகம் ஒன்றின் விரிவேயாகும். இந்த சுத்தாத்ம சைதன்ய உணர்வால், யோகிகள் உலகெல்லாம் தம்முள்ளும் தம்மையே உலகிலும் காண்பர். அவர்கள் தங்கள் யோக சித்தியை உலகெங்கும் பரப்பி உயிர்களுக்குப் புதிய உணர்ச்சியைத் தருகிருர்கள். அந்த உணர்ச்சிதான் இப்போது உலகில் விளையாடுகிறது. அந்த சைதன்ய சக்தியினுலேதான் இன்று இந்தியா விடுதலை பெற்றது. அந்தச் சக்தியை சில மகாத்மாக்களுள் நுட்பமாகப் பாய்ச்சி பரமயோகிகள் பரமோபகாரம் செய்கிருர்கள். லண்டன் பேச்சு நமது வீட்டு ரேடியோவில் எப்படிக் கேட்கிறது? ஆகாச சக்தி எங்கும் பரவியிருப்பதால் அந்த ஒலியும் இந்தப் பெட்டியில் ஒலிக்கிறது. அதுபோலவே யோகிகளின் தெய்வ சக்தி ததும்பும் மின்சாரவுள்ளம், உலகில் எங்கும் சுழன்று செல்லக்கூடியது. பண்பட்ட உள்ளங்களிலெல்லாம் அது இறங்கிப் பாவித் தனது காரியத்தைச் செய்கிறது.

சீடன்: ஆ! உணர்ந்தேன். குருநாதா! என் சஞ்சலம் ஒழிந்தது. குருதேவர் அருளால் நான் தவம்புரிந்து நிறைவுற்றுப் பிறகு திருவருள் விட்டபடி நடக்கிறேன்.

குரு: அப்பனே, உனக்கு யோகம் வரும். இன்றுமுதல் உள்ளே கவனத்தை ஊன்று.

> நேசம் பதிந்துள்ளே நின்றுருகி நெஞ்சாரப்
> பேசினுற் பேசும் பிரான்.

மனிதன் சக்தி மின்சாரம். ஆத்ம சக்தி மின்சாரம். மனம் புலன்கள் வழியே கண்டபடி வெளியே சென்று அலைந்தால் அந்த மின்

சக்தி சிதறிப்போகும். அதனாலேதான் சாதாரண மனிதர் தம்மை அறியவோ, அறிவின் பயனைப் பெறவோ முடிவதில்லை. மனம் உள்ளே குவிந்து, தெய்வக் கனலைத் தொட்டுவிட்டால் பிறகு மேன்மேலும் தியானம் நிலைக்கும், உள்ளின்பம் உணரும். வாழ்வின் பயன் விளங்கும். ஒளி துலங்கும். அருள் மலரும். அருளாணை பிறகு உன்னை நடத்தும். இதுதான் ஞான பக்தி கர்ம இரகசியம்.

சீடன்: பரம இரகசியம். மகோபதேசம். குருதேவா இனி என்னை வழி நடத்துக.

குரு: நண்பா, கடவுள் நல்ல உலகை, நல்ல உயிரை, நல்ல இயற்கையைத்தான் கொடுத்தார். மனிதன் வாழத் தெரியாமல் ஆளை மயக்கும் மனப்பிழைகளிலும் புலனாசைகளிலும் திரிந்து வாழ்வைப் பாழ்படுத்திக்கொண்டான். இன்று உலகம் அறங் குலைந்து, ஆணவமேறி, ஆசை வெறி பிடித்தலைகிறது. மாஸ்கோவிலும், வாஷிங்டனிலும், லண்டனிலும், பாரிசிலும் மகாநாடுகள் கூடியும் பயனென்ன? ஒருவருக்கொருவர் உள்ளே விஷம் வைத்தே பேசுகிறார்கள். எல்லாம் பேச்சு. பேச்சு முற்றிப் பெரும் போராகிறது. மகாநாடுகளெல்லாம் ஆயுதப் பெருக்காலும் உலகில் அமைதி நாட்ட முடியுமா? மனித வாழ்வு திருந்தி உலகை இன்பமாக்க வேண்டுமானால், முதலில் மனிதன் தன்னுள்ளே இன்பத்தை நாட்ட வேண்டும். ஆத்ம சாந்தி பெற வேண்டும். இந்த மகா நாடுகளில் வார்த்தைகளை அளந்து கொட்டுவதற்குப் பதில், உலகில் எல்லா மக்களும் தினம் காலை, மாலை ஒரு மணி நேரம் நிச்சிந்தையாக தியானம் செய்து, உள் இருக்கும் சுத்தான்மாவை அறிய முயலட்டும். ஆறு மாதத்தில் உலகமே அதிசயமான மாறுதலடையும். வாழ்க்கை உள் இருந்து மலரவேண்டும். உள்ளிருந்து திருந்தவேண்டும். மனித விலங்கு மிருகத் தன்மையிலிருந்து மனிதத் தன்மைக்கும், அதில் இருந்து தெய்வத் தன்மைக்கும் மாறிப் பொலியவேண்டும்.

[1947-ம் ஆண்டில் சுவாமி சுத்தானந்தரின் சிந்தனைக் கனவில் உதித்த "இதுதான் உலகம்" என்னும் நாலில் ஓர் சம்பாஷணை]

# நாவுக்கரசர் காட்டிய நாற்பாதம்

— [ முத்து ] —

முற்காலத்தில் பரத கண்டமெங்கணும் பரந்து நிலவிய தொன்மைச் சமயம் சைவமே. அச்சைவத்திற்கு ஒரு காலத்தில் புறச்சமயிகளால் பற்பல இடையூறுகள் ஏற்பட்டன. அவ் இடையூற்றைக் களைந்து சைவத்தைச் சிவத்தின் செம்பொருளாக உலகத்திற்கு விளக்கி வைத்தவர்கள் சமய குரவர்கள் நால்வர். அவருள் நாவுக்கரசுப் பெருந்தகை பசுகரணமெல்லாம் பதிகரணமாகத் திகழப்பெறும் சீவன் முத்த நிலையை எய்தியிருந்தார்.

"பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராக்கொண்ட—பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண்."—திருக்களிற்றுப்படியார்

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற் கேற்ப நாவுக்கரசுப் பெருந்தகை தாம் பெற்ற சீவன் முத்த நிலையை மற்றையோரும் அடையுமாறு மக்களின் பக்குவத்திற் கேற்ப சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நால்வகை நிலைகளிலும் விளக்கிச் சென்றுள்ளார் இந்நான்கு நிலையினையும் அடிமை நெறி, மகவு நெறி, தோழ நெறி, உண்மை நெறி என் றுஞ் சொல்வர். சமய குரவர்களாகிய நால்வர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கின் நாலுநெறிகளுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர்பால் அதிகமாகத் தோன்றுமாயினும் நால்வரும் சிவஞானிகளாய் இருத்தலின், ஒவ்வொருவர் வாக்கினுள்ளும் நானெறிகளும் புலப்படா நிற்கும்.

சிவாலயத்திற்குஞ் சிவனடியார்களுக்குந் தொண்டுசெய்தல் சரியை எனப்படும்;

சிவலிங்கப் பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியை எனப்படும்.

விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானித்துப் பின்பு தியானிப்போனாகிய தானுந் தியானமுந்தோன்றாது தியானப் பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப்பெறுதல் யோகம் எனப்படும்.

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல் ஞானம் எனப்படும்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலு மெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முனலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதி யென்றும்
ஆரூரா வென்றென்றே யலறு நில்லே."

இதில் சரியா பாத நிலையை விளக்குகிறார்.

"தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சாத்தி
ஆனிடை யஞ்சுங் கொண்டு அன்பினாலமர வாட்டி
வானிடை மதியஞ் சூடும் வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று நல்வினைப் பயனுற்றேனே."

இது கிரியா பாத நிலையை விளக்குகின்றது.

"உயிராவண மிருந்துற்று நோக்கி
உள்ளக் கிழியினிரு வெழுதி
உயிராவணஞ் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி"

"உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படு முணர் நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள விருந்து நோக்கிற்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே."

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணி சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே."

இவற்றால் யோக ஞானங்கள் விளங்கக் கிடக்கின்றன.

# — தமக்கையார் தவம் —

— [ ராம. சீதாபாய் ] —

தெய்வம் மணக்கும் செய்யுள் நிறைந்த பெரிய புராணத்திலே பேசப் பெறும் பெண் அடியார்களில் ஒருவராகிய அம்மையார் திலகவதியார், சைவம் ஓங்கவும், சைவமக்கள் புகழவும் பாடவும் நாவுக்கரசராகத் தன்னுடன் பிறந்தவரை உயரச் செய்த பெருமையை உடையவர். நாவுக்கரசர், சுந்தரர் ஆகிய இருவரது பிறப்பினாலும் சிறப்பினைக்கொண்டது திருமுனைப்பாடி நாடு அதனிடத்தே விளங்குவது திருவாமூர் என்னுந் திருத்தலம். அத்தலத்திலே அவதரித்தவர் திலகவதியார். அந்த அம்மையார், தனக்கென மணம் பேசிய கலிப்பகையார் போரில் இறந்தமை கேட்டு உயிர்விடத் துணிவுகொண்டார்.

இதைக் கண்ட அருமைச் சோதரர் மருணீக்கியார் "அடியேனைத் தனியே விட்டிறப்பீராகில் உமக்குமுன் நான் உயிர் விடுவேன்" என முறையிட்டார். தம்பியின் துயர் கண்டு, தான் கொண்ட செயலைத் தவிர்த்தார். தனக்கென வாழாது தம்பிக்கென வாழ்ந்தார் அம்மையார்.

அம்மையார் துறவுக் கோலத்தில் தபோதனியாக வாழலாயினர். மருணீக்கியார் சமணம் புகுந்து தரும சேனரானமை

---

[முற்பக்கத்தொடர்ச்சி]

"முன்னை மவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னையவனுடைய வாரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையு மத்தனையு மன்றே நீத்தாள்
அகன்றாளக லிடத்தா ராசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்றாளே"

உயிர் இறைவனோடு இரண்டறக் கூடுதலாகிய அத்துவித முத்தியைப் பெறுமாறு படி முறையாக உருவகவாய் பாட்டால் இதில் அருளிச் செய்துள்ளார் ஞானத் தவ முனிவராகிய நாவுக்கரசர்.

யறிந்து மனம் புழுங்கினர். வீரட்டானப் பெருமானை வணங்கும்போதெல்லாம் தன் திருத் தம்பியார் மதம் மாறிக் கிடக்கின்றவர் எவ்விதம் ஈடேறுவார் என்று மனம் வாடி இறைவனை வேண்டித் தவங்கிடந்தார்.

அம்மையாரின் கனவில் எழுந்தருளி, "உன் மனக் கவலையை ஒழி. உன்னுடன் பிறந்தவன் முன்னமேயே தவம்செய்து என்னை அடையும்பேறுபெற்றவன். ஆதலின் அவனை சூலைநோய் தந்து ஆட்கொள்வோம்" என அருள் பாலித்தார்.

ஒருநாள் தம்பியார் சூலைநோய் தாங்கமாட்டாது தமக்கையாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தாம் உய்யும் வழி யாது என முறையிட்டார். அப்போ அம்மையார் தமது திருக்கையால் திருநீற்றினைப் பஞ்சாட்சரம் ஓதிக்கொடுத்தார். அம்மையார் அளித்த நீற்றை பெருவாழ்வு வந்ததெனக் கருதி வாங்கித் திருமேனி முழுவதும் அணிந்துகொண்டார். அன்று முதல் தமக்கையார் செய்யுந் தவத்தைத் தானும் பின்பற்றினர்.

இன்று திருநாவுக்கரசு சுவாமிகளை எல்லாரும் வணங்கவும், அவர் செய்த திருப்பாடலை ஓதவும் இறைவனருள்பெற்று இன்புறவும் செய்தவர் திலகவதியம்மையாராகும். அம்மையாராகிய குரவரை நாவுக்கரசர் அடையாவிடில், திருநீற்றின் பெருமையும் மாமறை நூல் பெருமையும் நாம் அறியமுடியாததாகும். சிவபெருமானுக்கே ஆளாகிப் பணிசெய்து தவமியற்றிய திலகவதியம்மையார் எவ்வுயிரையும் ஒன்றாகக் கருதும் அருளைத் தாங்கினர். மனைத் தவத்தை மேற்கொண்டார். திருநீறும் கண்டிகையுந் தரித்து உள்ளன்போடு தமது திருக்கரங்களினாலே, திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவனஞ் சென்று மலர் பறித்தல், மாலை தொடுத்தல் முதலாந் திருப்பணிகள் செய்து இறைவனடிக்கு வழிகண்டார்.

அகத்திருளும் புறத்திருளும் மாறத் தம்பியார்க்குத் திருநீறளித்து அருட் குருவாகி ஆண்ட அம்மையின் பெருமையைத் திருநாவுக்கரசர் "எங்கள் குலத்தார் செய்த தவப்பயன் எல்லாம் திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போலும் அம்மே! என்னை ஆட்கொள்வீர்" என்று புகழ்கிறார்.

# இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஒழுக்கமுறையொன்றே.

.... [ A. C. இலஞ்சி ] ....

மனிதனுடைய இலக்கு முழுவதும் அவனுடைய இன்ப வாழ்க்கையே என்பது சொல்லாமலே பெறப்படும். சமயங்கள் அனைவற்றிலும் அவ்வாழ்க்கைக்கு வழி காட்டுவது ஒழுக்க முறையே. ஆற்றுநீர் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் சேரும் போது அது ஒழுக்கு எனப்படும். ஓட்டைக் கலயத்துள்ளது புறத்தே செல்வதும் ஒழுக்காம். ஆகவே, ஒழுக்கம் என்பது உயிர்களின் அகத்திருந்து புறத்தும், தம்மிடமிருந்து பிறரை நோக்கியும் செல்லும் அறிவு, இச்சை, செயல்களின் தொழிற்பாடுகளாம். மனிதன் தனிக்காட்டு மிருகமல்ல, ஒரு கூட்டுப் பிராணியாவான். புறத்து நேரும் இயற்கை நிகழ்ச்சிகள் உடம்பைத் தாக்கி மனிதனுக்கு இன்பதுன்பத்தை உண்டுபண்ணுவது போல, அவனிடமிருந்து புறஞ்செல்லும் ஒழுக்கமும் அவனையும் ஏனைய உயிர்களையும் இன்பத்திலோ துன்பத்திலோ ஆழ்த்திவிடும். அது காரணமாகவே, இன்ப வாழ்க்கைக்கு முறை வகுக்க வந்த சமயங்களெல்லாம் "நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்ற இறைநியதியைக் கைப்பிடித்து; ஒழுக்கத்தையே முதலாவது குறிக்கோளாகவும் முக்கிய குறிக்கோளாகவும் எடுத்தாள்வன. இந்த ஒழுக்க முறையில் மதங்களுக்குள் மாறுபாடு ஏது? கொலை களவு காமம் கள்ளுண்டல் பொய்ம்மொழிதலை விலக்காத மதம் எது? காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களை அறவே ஆகாவெனக் கூறாத மதங்கள் எவை? அம்மாதிரியே அறஞ் செய்தலை விதிக்காத மதம் எது? அன்பு இன்சொல் ஈகை அடக்கம் நன்றி பொறை முதலிய நற்குணங்களை இன்ப வாழ்க்கைக்கு ஊன்றுகோலாக ஏற்படுத்தாத மதங்கள் எவை? முப்பத்திரண்டென வகுக்கப்பட்ட அறங்களில் ஏதாவதொன்றைத் தீயது என்று கூறும் மதம் யாது? ஆழ்ந்த ஆராய்ச்சியின்றியே மதங்களுக்கிடையில் இந்த உயர்ந்த அடிப்படை உண்மையொன்று யாவருக்கும் புலப்

படுமானால், சமயங்களின் மற்ற மாறுபடும் அம்சங்களைப்பற்றிக் கவலைப்படுவானேன்? உலக முயற்சிகள் முழுவதும் மனிதனுடைய இன்ப வாழ்க்கைக்கன்றோ? அதற்குரிய மருந்தை எந்த அனுபானத்தில் கொடுத்தால் என்ன? சர்க்கரையில் பொதிந்தோ தேனில் கலந்தோ, தேத்தண்ணீரில் இட்டோ எவ்விதம் உண்டபோதிலும் ஒழுக்கமாகிய மருந்து ஒரே மருந்தாய், இன்ப வாழ்க்கையாகிய பலன் ஒரே அனுபவமாய் அமையுமாயின், மாறுபடும் சமயங்களின் மற்றப் பகுதிகளைக்கொண்டு சண்டைக்கொடி கட்டுவது மதியீனத்திலும் மதியீனமாகத் தோன்றவில்லையா? அதனால் பொறை என்ற நற்குணம் நீங்கி, அறிவு மழுங்கி, அன்பிற்கு இடையீறுண்டாய், சமயங்களின் முக்கிய குறிக்கோளாகிய இன்ப வாழ்க்கை கண்ணாடிச்சில் போலச் சிதறிச் சின்னாபின்னமாகிவிடுகின்றது. இது இன்று உலகில் காணும் கோரக் காட்சிகளில் ஒன்று.

இனி, தேசகால வர்த்தமானங்களுக்கேற்ப உள்ள வளர்ச்சிக்கு அமைக்கப்பட்ட கிரியை முறைகளிலும், ஆராய்வாருக்குச் சில அடிப்படை உண்மைகள் புலப்படும். தற்காலத்தில் அதிவேகமாகப் பயணஞ் செய்ய விரும்புவோருக்குப் பல பல யந்திரங்களும் கருவிகளும் அமைந்திருப்பதை யாவரும் அறிவர். அவற்றுள் சில மின்சாரத்தாலும் சில நீராவியாலும், சில மண்ணெய்யாலும் மற்றவை நிலக்கரியாலும் இயங்குவதையும் மக்கள் அறிவார்கள். இவற்றுள் ஒரு கருவிக்கேற்ற ஊட்டத்தை மற்ற கருவிகளுக்கு ஆக்கமுடியாது. அதற்காக யாரும் கங்கணங்கட்டிக்கொண்டு யுத்தக் களரியில் இறங்குவோரில்லை. ரயிலில் செல்பவன் மோட்டாரை முட்டி நொறுங்கியும், மோட்டாரில் செல்பவன் விமானத்தை நோக்கி வெடி வைத்தும் அல்லல் விளைவிப்பதைக் காண்கிலோம். அவரவர் இடம் பொருள் ஏவலுக்கேற்பக் கிடைத்த வண்டியில் ஏறித் தம்தம் காரியத்தை நோக்கிப் பயணஞ்செய்து வருவதே சாதாரண அனுபவமாக இருந்து வருகிறது. அம்மாதிரியான ஏற்பாடே சமயங்களில் காணப்படும் கிரியை முறைகளுமாம்.

இன்றைய முன்னேற்ற நாடுகளாகிய இங்கிலாந்து, வட அமெரிக்கா முதலிய இடங்களில், கல்வி அறைகளில் யந்திரங்களைக்கொண்டு காந்த சக்தியை பரப்பிப் பிள்ளைகளுடைய

அறிவை வேகமாக விருத்தி செய்ய முயல்கின்றனர். இது அந் நாடுகளில் சாதாரணப் பழக்கமாய்விட்டது. அதே முறையில் மக்கள் மனத்திற்கு சாந்தத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய பலவகையான சக்திகளை ஆன்ம சக்திகள் என்று சமயங்கள் கூறுகின்றன. அவற்றையும் தனித்தனியாகப் பிரித்துப் பெயரிட்டு விளக்கக்கூடிய பக்குவம் உலக வளர்ச்சியின்கண் இன்னும் ஏற்படவில்லையாதலால், அவை தொகுதியாகிய ஆன்ம சக்திகள் என்றே இன்று கூறப்படுகின்றன. அவற்றை மக்களிடம் பரப்புவதற்கு அமைந்த முறைகளே, ஆலயங்களிலும் மற்றிடங்களிலும் சமயங்கள் விதிக்கும் யந்திரங்கள் மந்திரங்கள் கிரிகைகள் முதலியன. மின்சார சக்தி ஒன்றையே உற்பத்தி செய்யும் கருவிகள் எத்தனையோ விதம் விதமாகவும் முறை முறையாகவும் ஆக்கப்பட்டிருப்பதுபோல், ஆன்மசக்தியை மனிதருக்கு வளங்கும் கிரிகைகளும், தேசகால வர்த்தமானங்கட்குத் தக்கபடி பலவிதங்களாய் அமைந்திருக்கும். இதுவே சமயக் கிரிகைகளின் அடிப்படை உண்மை. இந்த உண்மையை அறிந்தவர்கள் பிறமதக் கிரிகைகளில் பூரண விசுவாசத்தோடு கலந்து கொள்ளத் தயங்கார், பலன் பெறுவதிலும் குறைவுறார்.

ஆயினும்கிரியை முறைகளில் பற்றில்லாதவர் அதனைப் பற்றவேண்டுமென்ற அவசியமில்லை. ஏனெனில் இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஒழுக்கமுறையொன்றேயாகும். பித்தநோயுள்ளவனுக்குப் பித்தம் சாந்தமடையும்வரை சுவை ஏற்படாததுபோலவும், காய்ச்சலுள்ளவனுக்கு உடம்பு தன் சூடு பெறுமைபோலவும், ஒழுக்கமுறை கை வராதவனுக்கு இன்ப வாழ்க்கை எய்தவே எய்தாது. ஒழுக்கக் குறைவுடன் ஆன்ம வளர்ச்சியடைவது மிகவும் அபாயகரமானது. இந்த ஒருதலைப் பட்ட வளர்ச்சியால் ஏற்பட்டதே இன்று காணப்படும் உலக மகா யுத்தங்கள்' ஆதலால், இந்தக் கிரியை முறைகளுக்குத் தகுதிக்கு மேற்பட்ட மதிப்பைக் கொடுத்து, அது காரணமாக மக்கள் உம் சமயம் எம் சமயம் என்று சச்சரவு செய்வது அறிவுடைமையாகாது.

— ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

# சைவக் கிரியை விளக்கமும் ஆசிரமவொழுக்கமும்.

[ச. ப. ஷண்முகசுந்தரசர்மா]

சைவக்கிரியைகள் யாவும், பொது விதி, சிறப்பு விதியென இருவித ஒழுங்கு முறைகளுடன், எல்லாச் சைவக்கிரியா நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. இக்கிரியைகள், முறையே, "நித்தியம் நித்தியாங்கம்," "நைமித்திகம் நைமித்திகாங்கம்," "காமியம் காமியாங்கம்," எனவுள்ளன. இவற்றில் "நித்தியம் நித்தியாங்கமாகிய" கிரியைகளாவன. ஆத்மீக லாபங் கருதி மாலிடவர் ஒவ்வொருவரும் தந்தமது இயல்பு நிலைமைக்கேற்பத் தினந்தோறும் அனுட்டிக்கவேண்டிய, ஸ்நாநம், தர்ப்பணம், சிவபூஜை, (நித்திய) அக்கினி வளர்த்தலாதியனவும், இறைவனருளினால் உரைத்த உண்மை நூல்களினதும், அவற்றின் வழி நூல், சார்பு நூல்களினதும், இலக்கணங்களையும், உட்பொருளையும் சந்தேகமறக் கற்றுணர்தலுமாம். "நைமித்திகம் நைமித்திகாங்கமாகிய" கிரியைகளாவன, சைவமக்களெல்லோருடைய க்ஷேமங்கட்காகவும் சிவப்பிரதிஷ்டை, உற்சவம், ஸாந்திகள், கும்பஸ்தாபனாதி பூசைகள், யாகாதிகள் முதலியனவும் சைவசமய நூல்களிலே கற்றுணர்ந்த உண்மை விளக்கங்களையும், அந்நூல்களின் ஆராய்வின் முடிவிற்கண்ட உட்பொருளின் தன்மையையும் பிறவற்றையும், பலருமறிய உபதேசித்தலும், புஸ்தகங்களாக எழுதியுபகரித்தலுமாம். "காமியம் காமியாங்கமாகிய" கிரியைகளாவன, தனிப்பட்ட இஷ்டாநுகூல சித்திகளை விரும்பி நல்ல விசேட புண்ணிய தினங்களிலே, யாத்திரை செல்லுதல் புண்ணிய தீர்த்த ஸ்நாநஞ் செய்தல், தேவார்ச்சனை, புராண படனம், முதலானதும் பிறவுமாம்.

இம்மூவகையான கிரியைகளையும் செய்யவோ செய்விக்கவோ, சைவமக்கள் எல்லோருக்கும் உரிமையுண்டாமோ வென்னில்! அவரவர் வருணாச்சிரமவொழுக்கமுறைக்கேற்பச் செய்யலாமேயன்றி, எல்லாரும் எக்காலத்தும் எல்லாக் கிரியைகளையும் செய்வதற்கும் செய்விப்பதற்கும் அருகதையுடையோராகார், என்பது சைவ நூல்களிற் காணும் முடிபு. இஃதிங்ஙனமாக எம்மவருக்கு பிரமச்சரியம் கிருகஸ்தம், சந்நியாசம், என

# கண்டி, சாது ஸ்ரீ பீர்பாவா அவர்களின் அருள் மொழிகள்

9 திருகைக்கல் அதுதானே சுழல்வதில்லை. மனம் அது தானே சுழல்வதில்லை. வாசனை பந்த சங்கல்பத்தால் சதா சுழன்றுகொண்டிருக்கிறது. கொடிய வேகத்தாலோடும் குதிரையை சவாரிக்கு வேகத்தை குறைக்கக்கூடிய உபாயமில்லாவிடின் அவனுக்கென்ன பெருமையுண்டு. பலவாறாக வேகமாகச் செல்லும் மனதை ஒடுக்கக்கூடிய விவேக அறிவு இல்லாவிடில் தனது ஆத்மாவுக்கு என்ன பெருமையுண்டு.

10 சூரியனில்லாவிடில் சந்திரனில்லை; சந்திரனில்லாவிடில் சூரியனிருக்கும். சந்திரனில்லாவிடில் நட்சத்திரமில்லை; நட்சத்திரமில்லாவிடில் சந்திரனுண்டு. மனமில்லாவிடில் உதிப்பு இல்லை. உதிப்பில்லாவிடினும் மனமிருக்கிறது. அறிவில்லாவிடின் மனமில்லை; மனமில்லாவிடினும் அறிவு இருக்கிறது. ஜீவத்தன்மை இல்லாவிடின் தத்துவமில்லை; தத்துவமில்லாவிடின் ஜீவத்தன்மை யிருக்கிறது. சிவத்தன்மையில்லாவிடின் ஜீவத்தன்மையில்லை; ஜீவத்தன்மை இல்லாவிடினும் சிவத்தன்மை அதுதானே சுயப்பிரகாச நித்தியம்.

---

[முற்பக்கத் தொடர்ச்சி]

நான்கு ஆச்சிரமவொழுக்க முறைகளும், அவற்றிற்கேற்ப சரியை கிரியை, யோகம், ஞானம் என நால்வகைத் தொண்டுமுறைகளும், எங்கள் சைவ நூல்களிற் கூறப்பட்டுள்ளன. இவைகளில் பிரமசாரி சரியாபாதத் தொண்டினையும், கிருகஸ்தன் கிரியா பாதத் தொண்டினையும், வானப்பிரஸ்தன் யோக பாதத் தொண்டினையும், சந்நியாசி ஞான பாதத் தொண்டினையும், அனுஷ்டித்து முத்திபெறவேண்டும் என்பது முன்னோர்கண்ட முடிபாகும். அவ்வுண்மையின்படி அநுபவாயிலாக முத்திபெற்றாரது சரித்திர ஆதாரங்களும், சைவ புராணங்களிலே, காணக்கிடக்கின்றன. புராணங்கள் யாவும் நம் முன்னோரளித்த குறையாத பெருஞ் செல்வங்களாகும். இவற்றால் மக்கள் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடாகிய வுறுதிப் பொருள்களது விளக்கங்களையுணர்ந்து அனுபவத்தில் கொண்டொழுக வேண்டியது சைவமக்களது அரும் பெரும் கடமையாகும்.

[தொடரும்]

# சிவகதி விளைவு
# பேரின்பம் பெறும் முறை.

---

மெய்ம்மையாம் உழவைச் செய்து
　　விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
　　பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு
　　தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகில்
　　சிவகதி விளையுமன்றே.

இது திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம். தனித்திருநேரிசை. உழவன் ஒருவன் ஓர் நிலத்தை உழுது, வித்தினை விதைத்து, களை களைந்து, நீர்ப்பாய்ச்சி, உற்று நோக்கி, வேலி கட்டி செம்மையாய்ப் பாதுகாப்பானானல் பயிர் செழித்து வளர்ந்து பலன் தரும். அதுபோல இறைவனை அடைய விரும்புகின்ற ஒருவனும் உண்மையினை சிந்தித்துக் கண்டு, அதனை உணர்ந்து, கடவுளிடத்தில் அன்பினை ஊன்றி வழிபட வேண்டும். உண்மைகளைப்பற்றி உண்டாகும் சந்தேக விபரீதங்களை அறக் களைந்து, அவ்வுண்மைகள் உறுதியாய் நிலைத்து நிற்கச் செய்யவேண்டும். வினைவசத்தால் துன்பம் வரினும் அதனைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். கடவுளைப்பற்றிய ஞானமும் பக்தியும் உறுதியாகி உள்ளுணர்வு எழவேண்டும். உள்ளுணர்வு பூர்வ வாசனையால் தாக்கப்பட்டு அழியாமல் இருக்கும்படி சிவோஹம் பாவனை செய்து ஐந்தெழுத்தோதி நிலைத்த தியானத்திருக்கவேண்டும். அவ்வாறு இறைவனையே தியானிக்க பேரின்பமாகிய பெரும் பயனை அடையலாம்.

# ஞானம்.

(தென்னாப்பிரிக்கா, டர்பன் திரு: ச. மு. பிள்ளை அவர்கள்)

அறிஞர்கள் கலப்பற்ற ஞானத்தைப் பெறுவதற்கு வாழ்க்கையில் போட்டுவரும் சண்டைதான் உண்மையான சண்டை. அப்படிச் சண்டைபோடுபவர்கள்தான் சுத்த வீரர்கள்.

அறிவாளிகள் உலகம்தான் சரியான உலகம். அவ்வுலகத்தில் வசிப்பதுதான் பேரானந்தம். மற்ற ஆனந்தங்களெல்லாம் அதற்குக் கீழ்தான். அறிவாளிகள் வகுப்பாரையே எவ்வுலகமும் போற்றும்.

ஞானமே அன்பு; ஞானமே சாஸ்திரம்; ஞானமே நம்பிக்கை; அதுவே தைரியம்; அதுவே உறுதி; அதுவே அறம். ஞானமில்லாவிடில் வாழ்க்கையில்லை. மனித வாழ்க்கை அப்போது துக்கமாகிவிடும். ஆகவே மனிதனாகப் பிறந்தவன் ஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும். அப்படி முயற்சி செய்யாதவன் பாமரம்தான்.

பணம் பணம் என்று மனிதர்கள் அலைகின்றார்கள். ஏன்? அறியாமைதான் காரணம். பணத்தைத் தேடி வைப்பவர்களின் கதி என்ன? அவர்களுக்குத் துக்கமும், பயமும்தான். மோட்சம் பணத்தைத் தேடும் முயற்சிகளில் கால்வாசி ஞானத்தைச் சம்பாதிக்க செலவழிக்கட்டும் ஞானத்தைக்காட்டிலும் செல்வம், பூவுலகிலுண்டோ? எவரேனும் உண்டென்று கூறத் துணிவோரா?

வீட்டில் வைரமும், வைடூரியமும், முத்தும், பவழமும் பணமும், காசும், தங்கமும், வெள்ளியும் இருந்தும் என்ன பயன்? சுகம் உண்டா? இல்லை. இவைகளெல்லாவற்றையும்விட விலை மதிப்புள்ளதும், சுகத்தைக் கொடுக்கக்கூடியதுமான ஞானத்தை ஏன் தேடிக்கொள்ளக்கூடாது?

ஒருவன் ஞானமுடையவனாயிருந்தால், அவனைவிட சுகமான வேறு எவனுமிரான். அவன் ஒருவனே உண்மைச் சுகத்தை யனுபவிப்பான். உலகப் பொருள்களில் எவனுக்கு இச்சை அதிகமாகின்றதோ, அவனைப்போல பயங்கொள்ளியை எங்கும் காணமுடியாது. ஞானமுள்ளவன் நூறு பலிஷ்டர்கள் முன்னிலையிலும் வெற்றி பெற்றுவிடுவான்.

ஞானமுள்ளவனுக்கு உலகத்தில் பற்றிராது. எப்பேர்ப் பட்ட துக்கம் வந்தாலும், கப்பல் கவிழ்ந்தாலும், கொலைகள் நேரிட்டாலும் சிறிதும் கவலைப்படமாட்டான். அவன் நிதானத்தை இழக்கமாட்டான். முன்பின் யோசித்து, எந்தக் காரியத்தையும் திருப்திகரமாய்ச் செய்து கடைசியில் வெற்றி பெறுவான்.

ஞானம்தான் உண்மையான சுக வாழ்க்கையின் ஊற்று. ஞானமுள்ளவன் மனிதர்களை நேசிப்பான். எல்லோரையும் சம திருஷ்டியோடு பார்ப்பான். ஏழைகளைக் கண்டு இரங்குவான். ஏழைகளின் சுக துக்கங்களைத் தன்னுடையதாகப் பாவிப்பான். தன்னால் ஏழையின் கஷ்டங்களை நீக்க முடியவில்லையே யென்று தேம்பித் தேம்பி அழவும் செய்வான். அவன் ஏழைகளின் சுகத்திற்குக் கடவுளை சதா நினைத்தவண்ணமாக விருப்பான்.

ஞானத்திற்கு அழிவில்லை. அது எப்போதும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அது களங்கமில்லாதது. நள்ளிரவாயிருந்தாலும், அது சூரிய மணிபோல் பிரகாசித்து நிற்கும். ஞானத்தின் அழகே அழகு. அதன் அழகை வருணிக்க எவராலும் இயலாது.

ஞானம் ஆத்மாவை ரமிக்கச் செய்யும். திருப்திக் கடலில் மூழ்கியிருக்கச் செய்யும். உலகத்தைக் கட்டியாளும். துர்க்குணங்களை அடக்கிப்போடும். துர்ச்சகவாசத்தை ஒழித்துப் போடும். அநாசாரங்களை விலக்கி நிற்கும்.

ஞானத்தை எங்குக் காணலாம்? என்று ஒரு சிஷ்யன் ஒரு ஞானவானைக் கேள்விகேட்டான். அதற்கு அவர் இருட்டறையில் ஒரு விளக்கைக் கொண்டுபோனால் எப்படி அது அவ்வறையைப் பிரகாசிப்பிக்கச் செய்கின்றதோ அப்படியே ஞானமானது மனிதர்களைச் சோபிக்கச் செய்கின்றது என்று கூறினார்.

ஞானத்தை எவன் விரும்புகின்றானோ அவனுக்குமாத்திரம் அது கிட்டுமேயல்லாது விரும்பாதவனுக்குக் கிட்டாது. அதை நேசிக்க நேசிக்க ஆனந்தம் பெருகும்.

ஞானமுள்ளவன் உலகத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதே லட்சியமாகக் கொண்டிருப்பான். அவன் ஆத்மாவைக் கனிக்கச்செய்து, மானிடர்களின் துக்கங்களைப் போக்குவதற்கு உபாயங்களைக் கேட்போருக்கு உபதேசம் செய்வான். ஞானம் உள்ளவனுக்கு ஒரு நாளும் குறைவில்லை.

# இந்துப்பெண்கள் ஆச்சிரமம்.

ஆச்சிரமம் தொடங்கவேண்டிய காரணங்கள் :—

1 இந்துப் பெண்களிற் கைம்பெண்களும், விவாகத்தை விரும்பாத பெண்களும் அமைதியாக வாழ்வதற்கு ஒரு இடம் அவசியம்.

2 மற்றச் சமயங்கள் இத்தகைய ஆச்சிரமங்களை தொடங்கி இருக்கிறார்கள்—இதனல் இந்துப்பெண்கள் வேறு மதங்களைத் தழுவுகிறார்கள்.

3 ஆச்சிரமத்தைச் சேரும் பெண்கள் மனதை நன்னிலையில் நிறுத்தி வாழ்க்கையைப் பலனடையச் செய்யலாம்.

4 ஆச்சிரமம் அனாதைப் பெண்களுக்குப் புகலிடமாக அமையும்.

5 சிறந்த வாழ்க்கை வாழ்வதற்குப் பிறபெண்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

6 இவ்வாச்சிரமத்தில் வாழும் பெண்கள் நேரத்தை வீண் செலவு செய்யாது கடவுள் வணக்கத்திலும், வேறு தொண்டுகளிலும் ஈடுபட வேண்டும்.

7 ஆச்சிரமத்தில் நெசவு, சங்கீதம் போன்ற பல கலைகளை வளர்க்கலாம் — ஆச்சிரமம் கலை முன்னேற்றத்திற்கேதுவாய் இருக்கும்.

8 ஆச்சிரமம் நன்றாக வேரூன்றி வளர்ந்தபின் சமூகத் தொண்டுகள் செய்யத் தொடங்கலாம்—அனாதைப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டலாம்.

9 வாழ்க்கையை வெறுத்தவர்களுக்கு ஆதரவளிக்க ஆச்சிரமம் அவசியம் தேவை.

ஆச்சிரமத்திற் சேர்பவர்களுக்குரிய விதிகள் :—

1 உலக வாழ்க்கையைத் துறந்தவர்கள் மாத்திரந்தான் இதிற் சேரவேண்டும்.

2 ஆச்சிரமத்தில் இருக்கும் பொழுது ஒரு பெண்ணாவது விவாகத்தையோ வேறுவித இன்பங்களையோ விரும்பக்கூடாது

3 ஆச்சிரமத்திலிருந்தும் உலகவாழ்க்கையை விரும்புவோர் உடனே ஆச்சிரமத்தைவிட்டு நீங்கிவிடவேண்டும். இதற்குரிய வசதிகள் செய்யப்படும். ஆனால் ஆச்சிரமத்திலிருந்து வழி தப்பி நடப்போர் கொடிய பழிக்கு ஆளாவர்.

4 ஆச்சிரம வாழ்க்கையை எவ்விதத்திலும் மாசு அடையச் செய்யக்கூடாது.

5 வெள்ளைத் துணி உடுக்கவேண்டும்.

6 பெண்கள் உலக வாழ்க்கையை விரும்பாததிற்கு தக்க காரணமின்றி ஆச்சிரமத்திற் சேர்க்கப்படமாட்டார்.

7 ஆண்களை ஆச்சிரம வாழ்க்கையிற் பங்குபற்றவிடக்கூடாது.

8 ஆச்சிரமப் பராமரிப்புக்காக அங்கே வாழும் பெண்கள் தகுந்த உதவி செய்யவேண்டும்.

9 ஆச்சிரமத்திலிருந்தும் வெளியே வேலை பார்க்க விரும்புவோர், அப்படிச் செய்யலாம். இவர்கள் வெளியே தகுந்த விடுதிச்சாலைகளிற்றங்குவதற்கும் அனுமதி கொடுக்கப்படும். விடுதலை நாட்களில் ஆச்சிரமத்தில் தங்கலாம்.

10 புலால் உண்ணக்கூடாது.

ஆச்சிரம வாசிகள் நாளைக் கழிக்கும் முறை:—

மு. ப. 8— 9 பிரார்த்தனை பஜனை.

மு. ப. 9—12 ஏதாவதொரு தொழிலிலீடுபடுதல்.

பி. ப. 2— 4 ,, ,, ,,

பி. ப. 4— 6 கூட்டங்கள்.

இரவு 6— 7 பஜனை பிரார்த்தனை.

இடையிடையே பூசை முதலியன வைத்தல்.

இவற்றில் ஆர்வமுள்ள அன்பர்கள் தமது அபிப்பிராயங்களையும் புத்திமதிகளையும் பின்வரும் விலாசத்திற்கு அறியத்தருமாறு வேண்டுகின்றோம்.

இந்துப்பெண்கள் ஆச்சிரமம்
மே/பா ஆத்மஜோதி நிலையம்.
நாவலப்பிட்டி
சிலோன்

# ஆத்ம ஜோதி ஆயுள் சந்தா

## — ஆதரவாளர்கள் —

திரு. க. நாகலிங்கம்—சுப்பிரமணிய வித்தியாசாலை,
மனேஜர்—வட்டுக்கோட்டை.

திரு. K. சந்தையா—தலைமை ஆசிரியர்,
சுப்பிரமணிய வித்தியாசாலை—வட்டுக்கோட்டை.

---

அன்பர்களே!

புது வருடம் பிறக்கின்றது. இச்சுபதினத்தில் நாம் ஒரு நல்ல சருமம் செய்யவேண்டாமா?

பின்வரும் வினாக்களுக்கு விடைகண்டு அவற்றைச் செய்கையில் நிறைவேற்றுதல் மூலம் புதுவருடத்தில் நல்லதோர் கருமத்தில் நீங்கள் பங்குபெறலாம்.

1 நான் ஆத்ம ஜோதியில் ஒரு அங்கத்தவனாயிருக்கிறேனா?

2 எனது சந்தா முழுவதையும் அனுப்பிவிட்டேனா?

3 நான் ஒரு சாதாரண அங்கத்தவன்தானே! ஏன் ஆயுள் சந்தாதாரனாக ஆகமுடியாது?

4 சோதியின் வளர்ச்சிக்கு ஏதாவது நன்கொடை அனுப்பினேனா?

5 ஒரு புதிய அங்கத்தவரையாவது சோதிக்குச் சேர்த்து உதவினேனா?

6 சோதியின் வளர்ச்சிக்குத் திருவருட் துணை பாலிக்கவேண்டுமென்று எனது பிரார்த்தனையில் பிரார்த்தித்தேனா?


## —: கிருஷிகன் :—

—[ பயிர்த்தொழில் முன்னேற்றப் பத்திரிகை ]—

உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. நாட்டின் உயிர்நாடி உணவே. இன்று உலகின் எப்பக்கத்திலும் உணவு பற்றாக்குறையே குறையாக உளது. இத்தருணத்தில், பயிர்த்தொழில் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரக் கருதி கிருஷிகன் வெளிவந்தமை வரவேற்கத்தக்கதே. கிருஷிகர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் உபயோகமுள்ள மாத வெளியீடாகும்.

கிருஷிகன் காரியாலயம்,
பயிர்த் தொழில் பண்ணை, ஹனுமந்தபுரம்,
அன்னியூர் P. O. விழுப்புரம் S. I. RY.

# புதுவருஷம்.

Regd. at the G. P. O. as a
News Paper No. H. C. 59/300

சித்திரைத் திங்கள் முதல் நாள் சீரியோர் கொண்டாடும் நன்னாள். தமிழ் வருடப் பிறப்பு நாள். தமிழர் கனி கண்டு களிக்கும் நாள். ஏழை எளியோர் எஜமான்களிடம் கைநீட்டம் வாங்கி இன்புறும் நாள். இந்நாளை ஓர் நன்னாளாய் நம் முன்னோர்கள் பன்னெடுங்காலமாய்க் கொண்டாடி வருகின்றனர். அது ஏன் எனக் கேட்பார் இக்கால மக்கள்.

சித்திரை மாதம் கதிரவன் பூமத்திய ரேகைக்கு வந்து நமது பாரத நாட்டில் அவனது தண்ணருள் யாத்திரையை தொடங்குகிறான். தட்பம், வெப்பம், மாரி, விளைவு, பலன் முதலியன அவனது வரவால் மக்கள் பெறுகின்றனர்.

இவ்வாறு கதிரவனால் பெறும் நலத்திற்கு நாம் அவனிடம் காட்டும் நன்றியே சித்திரை விஷு நாளாம். புதிய விளைபொருள்கள் பெற்று அது துய்க்கத் தொடங்கும் நாளும் அதுவேபாகும். மாங்கனி, பலாக்கனி முதலிய கனிகள் கனியும் நாளும் அந்நாள் முதலேயாகும். புது விளைபொருள் வித்திடும் நாளும் அதுவேயாகும்.

புத்தாண்டோடு பழைய தீய பழக்கங்களுக்கு விடை கொடுத்துப், புதிய நற்பழக்கங்களைப் பழகுவோமாக. எம்மிடத்திலே உள்ள ஏதாவது ஒரு தீய பழக்கத்தை நீக்கிப் புதுமையுடன் புது வருஷத்தை வரவேற்போம். எத்தனை புது வருடங்கள் கழிந்துவிட்டன. மனித உள்ளம் மாத்திரம் புதுமை பெறவில்லை.

ஆத்ம ஜோதி அன்பர்களிற் சிலர் புத்தாண்டோடு சீவிய சந்தாதாரர்களாகி இருக்கிறார்கள். சிலர் புத்தாண்டுக்குச் சில புதிய அங்கத்தவர்களைச் சேர்த்து உதவியிருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் சோதியின் வளர்ச்சிக்கு புத்தாண்டுத் தருமமாக நன்கொடை உதவி இருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்தும், நன்றியும் உரித்தாகுக.

வாழ்க புத்தாண்டு வளர்க நம் செந்தமிழ்
வாழ்க திருவடி இறைவன் அருளால்
வாழ்க மக்கள் நன்னெறி வாய்ந்து
வாழ்க ஜோதி நலமுடன் வாழ்க.

ஆநந்தம். சாந்தி.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்,
பதிப்பாசிரியர்: கா. முத்தையா
ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி, இலங்கை.
அச்சுப்பதிப்பு: சரவண அச்சகம், நாவலப்பிட்டி